மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
நி.இ.ம.எண்: 01/2019
நி.ம.எண். 16/2015
அ.வ.எண்,75/2001

1. பழனியப்பன் (இறந்துவிட்டார்) . . . மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்

2. சின்னதாயி
3. பழனியப்பன்
4. செல்லகண்ணு
5. சித்தையன்
6. பழனியம்மாள்
7. மாதையன்
8. மாரிமுத்து . . . மனுதாரர்கள்/மனுதாரர்கள்/தீர்ப்பாணை பெற்றவர்கள்

/எதிராக/

1. மாரியண்ணன்
2. பழனியப்பன் (இறந்துவிட்டார்)
3. முத்து
4. பெரியண்ணன்
5. தாண்டவன்
6. மாதையன்
7. மாரியப்பன் (இறந்துவிட்டார்)
8. மோகன்
9. அண்ணாமலை
10. செல்லம்மாள்
11. மைனர். செல்வராஜ்
(Rep. By his N.F. Mother guardian No.10 Sellammal)

12. மாரியம்மாள்
13. பார்வதி
14. பழனிகவுண்டர் (இறந்துவிட்டார்)
15. வெங்கடாசலம்
16. மாராக்காள்
17. பழனியம்மாள்
18. பெரியம்மாள்
19. பூங்கொடி
20. மாரியம்மாள்*
21. தாண்டவன்*

22. கோவிந்தம்மாள்* ... எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள்
*(Amended carried out as per order I.A.9/2021 dt.19.11.2021)

இம்மனு கடந்த 02.08.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், 1, 3 முதல் 6, 8, 10 முதல் 12 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், 2, 7 மற்றும் 14 எதிர்மனுதாரர்கள் இறந்தவர்களாகவும், 9, 13, 15 முதல் 19 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 20 முதல் 22 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.P.சுவாமிநாதன் அவர்கள் ஆஜராகியும், 20 முதல் 22 வரையிலான எதிர்மனுதாரர்கள் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், இது நாள்வரை எமது ஆய்வில் இருந்து வந்த மேற்படி மனுவினை பரிசீலனையில் எடுத்துக் கொண்டு இருதரப்பு சான்றாவணங்கள், சாட்சியங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32 விதி 11 மற்றும் பிரிவு 151 ன் கீழ் 11 ம் எதிர்மனுதாரரின் காப்பாளராக 10 ம் எதிர்மனுதாரர் செயல்பட்டு வருவதை நீக்க கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

### 1) மனுவின் சுருக்கம்

எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை, சுவாதீனம் மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி 1 ம் மனுதாரரால் தாவா தாக்கல் செய்யப்பட்டு 1 ம் மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பானது. அதற்கு எதிராக 1, 2 ம் மேல்முறையீட்டு மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் சுவாதீனத்தை ஒப்படைக்க கோரி இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பு விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில் கடந்த 13.07.2018 ம் தேதியில் 11 ம் எதிர்மனுதாரர் உரிமை வயது அடைந்துவிட்டதாக கூறி, எதிர்மனுதாரர்களால்

குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் 11ம் எதிர்மனுதாரரின் காப்பாளராக 10ம் எதிர்மனுதாரர் செயல்பட்டு வருவதை நீக்க கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 5ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 1, 3, 4, 6, 8, 10 முதல் 12ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்

மனு பொய்யானது. மோசடியானது. சட்டவலிவற்றதும் ஆகும். இ.ம.எண்.01/2019 மனுவில் 8ம் மனுதாரர் மாரிமுத்துவிற்கு வயது 4 என்று மேற்படி மனுவின் நெடுந்தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், 8ம் மனுதாரர் பெயருக்கு முன்பு மைனர் என்ற வார்த்தையும், பின்னர் மேற்படியாருக்கு கார்டியனும் நியமிக்கப்படவில்லை என்ற ஒரே காரணத்தினாலேயே இந்த நிறைவேற்று மனுவும், அதற்கான தீர்ப்பாணையும் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1, 3, 4 முதல் 6, 8, 10 முதல் 12ம் எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) 11ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்

மனு பொய்யானது. மோசடியானது. சட்டவலிவற்றதும் ஆகும். இ.ம.எண்.01/2019 மனுவில் 8ம் மனுதாரர் மாரிமுத்துவிற்கு வயது 4 என்று மேற்படி மனுவின் நெடுந்தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், 8ம் மனுதாரர் பெயருக்கு முன்பு மைனர் என்ற வார்த்தையும், பின்னர் மேற்படியாருக்கு கார்டியனும் நியமிக்கப்படவில்லை என்ற ஒரே காரணத்தினாலேயே இந்த நிறைவேற்று மனுவும், அதற்கான தீர்ப்பாணையும் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 11ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

4) 13ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 9, 15 முதல் 19 வரையிலான எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்

மனு பொய்யானது. மோசடியானது. சட்டவலிவற்றதும் ஆகும். இ.ம.எண்.01/2019

மனுவில் 8ம் மனுதாரர் மாரிமுத்துவிற்கு வயது 4 என்று மேற்படி மனுவின் நெடுந்தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், 8ம் மனுதாரர் பெயருக்கு முன்பு மைனர் என்ற வார்த்தையும், பின்னர் மேற்படியாருக்கு கார்டியனும் நியமிக்கப்படவில்லை என்ற ஒரே காரணத்தினாலேயே இந்த நிறைவேற்று மனுவும், அதற்கான தீர்ப்பாணையும் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 9, 13, 15 முதல் 19 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

<u>5) 5ம்எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 1, 3, 4, 6, 8, 10 முதல் 12ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கூடுதல் எதிருரையின் சுருக்கம்</u>

மனு பொய்யானது. மோசடியானது. சட்டவலிவற்றதும் ஆகும். மனுதாரர்களின் கோரிக்கை காலவரையறைச் சட்டத்தாலும், இந்திய வாரிசுரிமை சட்டத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பாணை நிறைவேற்ற இயலாத ஒன்றாகும். இறந்த 1ம் மனுதாரரின் வாரிசுகள் இந்திய வாரிசுரிமை சட்டத்தின் கீழ் எவ்வித வாரிசுரிமை சான்றிதழையும் தாக்கல் செய்யாமல், இம்மனுவை தாக்கல் செய்துள்ள காரணத்தினாலேயே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். முறையாக திருத்தப்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. இளவர் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்படவில்லை. தீர்ப்பாணை தொடர்பாக நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு, அதில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1, 3, 4 முதல் 6, 8, 10 முதல் 12ம் எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

6) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

7) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

8) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை, சுவாதீனம் மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி 1ம் மனுதாரரால் தாவா தாக்கல் செய்யப்பட்டு 1ம் மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பானது. அதற்கு எதிராக 1, 2ம் மேல்முறையீட்டு மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அதன் அடிப்படையில் சுவாதீனத்தை ஒப்படைக்க கோரி இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பு விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில் கடந்த 13.07.2018ம் தேதியில் 11ம் எதிர்மனுதாரர் உரிமை வயது அடைந்துவிட்டதாக கூறி, எதிர்மனுதாரர்களால் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது என்றும், அதன் அடிப்படையில் 11ம் எதிர்மனுதாரரின் காப்பாளராக 10ம் எதிர்மனுதாரர் செயல்பட்டு வருவதை நீக்க கோரி மனுதாரர்கள் மனு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.01/2019 மனுவில் 8ம் மனுதாரர் மாரிமுத்துவிற்கு வயது 4 என்று மேற்படி மனுவின் நெடுந்தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், 8ம் மனுதாரர் பெயருக்கு முன்பு மைனர் என்ற வார்த்தையும், பின்னர் மேற்படியாருக்கு கார்டியனும் நியமிக்கப்படவில்லை என்ற ஒரே காரணத்தினாலேயே இந்த நிறைவேற்று மனுவும், அதற்கான தீர்ப்பாணையும் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் எதிர்வாதம் செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) 1, 3, 4 முதல் 6, 8, 10 முதல் 12ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு, அதில் மனுதாரர்களின் கோரிக்கை காலவரையறைச் சட்டத்தாலும், இந்திய வாரிசுரிமை சட்டத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், தீர்ப்பாணை நிறைவேற்ற இயலாத ஒன்று என்றும், இறந்த 1ம் மனுதாரரின் வாரிசுகள் இந்திய வாரிசுரிமை சட்டத்தின் கீழ் எவ்வித வாரிசுரிமை சான்றிதழையும் தாக்கல் செய்யாமல், இம்மனுவை தாக்கல் செய்துள்ள காரணத்தினாலேயே இம்மனு தள்ளுபடி

செய்யப்பட வேண்டும் என்றும், முறையாக திருத்தப்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும், இளவர் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றும், தீர்ப்பாணை தொடர்பாக நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு, அதில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) மனுவினை பரிசீலனை செய்ததில், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை, சுவாதீனம் மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி 1ம் மனுதாரரால் தாவா தாக்கல் செய்யப்பட்டு 1ம் மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றும், அதற்கு எதிராக 1, 2ம் மேல்முறையீட்டு மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அதன் அடிப்படையில் சுவாதீனத்தை ஒப்படைக்க கோரி இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் இம்மனுவில் இளவரான 11ம் எதிர்மனுதாரர் உரிமை வயதை அடைந்துவிட்டதாக கூறி, எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடந்த 13.07.2018ம் தேதியில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதனால் 11ம் எதிர்மனுதாரருக்கு அடுத்த சிநேகிதராக செயல்பட்டு வரும் 10ம் எதிர்மனுதாரரை மேற்படி நிலையிலிருந்து நீக்க கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(v) இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் 8ம் மனுதாரர் மாரிமுத்துவிற்கு வயது 4 என்று மேற்படி மனுவின் நெடுந்தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், 8ம் மனுதாரர் பெயருக்கு முன்பு மைனர் என்ற வார்த்தையும், பின்னர் மேற்படியாருக்கு கார்டியனும் நியமிக்கப்படவில்லை என்ற ஒரே காரணத்தினாலேயே இந்த நிறைவேற்று மனு நிலைக்கத்தக்கதல்ல என எதிர்வாதம் செய்துள்ள நிலையில், வழக்கு கோப்பை பரிசீலனை செய்கையில், மனுதாரர்களால் மனுவின் காரண நெடுந்தலைப்பில் 8ம் மனுதாரரின் வயது 41க்கு பதிலாக 4 என தவறுதலாக மனுதாரர்களால் குறிப்பிடப்பட்டுள்ளதும், பின்னிட்டு மனுதாரர்களால் இந்நீதிமன்றத்தில் மேற்படி தவறை திருத்தக்கோரி நி.இ.ம.எண்.03/2019 தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 28.02.2020ம் தேதியில் இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட

உத்தரவின்படி மேற்படி பிழை மனுதாரர்களால் திருத்தப்பட்டுள்ளது தெரியவருகிறது. அவ்வாறு உள்ள நிலையில், எதிர்மனுதாரர்களால் முன் வைக்கப்பட்டுள்ள மேற்படி எதிர்வாதம் இந்நிலையில் பயனற்றது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vi) அடுத்ததாக, இறந்த 1ம் மனுதாரரின் வாரிசுகள் இந்திய வாரிசுரிமை சட்டத்தின் கீழ் எவ்வித வாரிசுரிமை சான்றிதழையும் தாக்கல் செய்யாமல், இம்மனுவை தாக்கல் செய்துள்ள காரணத்தினாலேயே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என முன்வைக்கப்பட்டுள்ள எதிர்வாதத்தை கருத்தில் கொள்கையில், இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும் சங்கதி யாதெனில், தீர்ப்பாணை பெற்றவர் நிறைவேற்று மனு தாக்கல் செய்வதற்கு முன்பே இறந்திருந்து, மேற்படி இறந்த தீர்ப்பாணை பெற்றவரின் சட்ட சார்பாற்றுநரால் மேற்படி தீர்ப்பாணையை கோரி நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்படும் பட்சத்தில் தான் மேற்படி வாரிசுரிமை சான்றிதழ் தாக்கல் செய்ய வேண்டும் என்பது நன்கு நிறுவப்பட்ட சட்ட நிலைப்பாடாகும்.

(vii) மேற்கண்ட இந்நீதிமன்றத்தின் கருத்திற்கு வழிகாட்டும் விதமாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால், ***"AIR 1971 Madras 419, Ramanatha Reddy vs. K.V.Kuppuswami Mudaliar"*** என்ற வழக்கில், "It appears, therefore, that it is only when the legal representative files a fresh application for execution, Section 214 will stand attracted and not when he seeks to continue the execution petition initiated by the deceased decree-holder." என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில், இம்மனுவில் தீர்ப்பாணை பெற்ற 1ம் மனுதாரர் பழனியப்பன் என்பவர் இம்மனு நிலுவையில் உள்ள போது இறந்துவிட்டதும், அதன் அடிப்படையில் நி.இ.ம.எண்.46/2017 தாக்கல் செய்யப்பட்டு, 2 முதல் 8 வரையிலான மனுதாரர்கள் மேற்படி இறந்த 1ம் மனுதாரரின் வாரிசுதாரர்களாக இம்மனுவில் கடந்த 08.11.2017ம் தேதிய உத்தரவுப்படி சேர்க்கப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. அவ்வாறு உள்ள நிலையில், 2 முதல் 8 வரையிலான மனுதாரர்கள் வாரிசு சான்று தாக்கல் செய்யாததால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்ற எதிர்வாதம் ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(viii) அடுத்ததாக, எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிருரையில் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக மறு ஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு, அது நிலுவையில் உள்ளது என்றும், நீதிமன்றத்தால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. ஆனால் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தீர்ப்பாணைக்கு எதிராக எந்த நீதிமன்றத்தில் மறு ஆய்வு தாக்கல் செய்யப்பட்டுள்ளது? என்பது குறித்தோ, எந்த நீதிமன்றத்தில் மேற்படி தீர்ப்பாணைக்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது? என்பது குறித்தோ எவ்வித தெளிவான விளக்கத்தையும் மேற்படி எதிருரையில் தெரிவிக்கவில்லை. அதேபோல் மேற்படி மறு ஆய்வு மற்றும் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது தொடர்பான எந்த ஆவணங்களையும் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

(ix) எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிருரையில் மனுதாரர்களின் கோரிக்கை காலவரையறைச் சட்டத்தாலும், இந்திய வாரிசுரிமை சட்டத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை பரிசீலனை செய்கையில், பொதுவாக விசாரணை நீதிமன்றம் தீர்ப்பாணைக்கு புறத்தே செல்ல இயலாது என்பது நன்கு நிறுவப்பட்ட சட்ட நிலைப்பாடாகும். அவ்வாறே எனினும் மேற்படி காலவரையறை மற்றும் இந்திய வாரிசுரிமை சட்ட நடைமுறைகளால் இம்மனு பாதிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர்கள் முன்வைக்கும் எதிர்வாதத்தை அசல் நிறைவேற்று மனுவில் தீர்மானிக்க இயலுமே அன்றி தற்போது உரிமை வயது அடைந்த இளவரின் அடுத்த சிநேகிதரை நீக்கவும் சம்பிரதாய பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த இடைநிலை மனுவில் மேற்படி தகுதிப்பாடுகளை தீர்மானிக்க இயலாது என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

(x) மேற்கண்ட விவாதங்களில் அடிப்படையில், தற்போது மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது அசல் நிறைவேற்று மனுவில் தகுதிப்பாடுகள் தொடர்புடையதல்ல என்பதாலும், 11ம் எதிர்மனுதாரர் உரிமை வயதை அடைந்துள்ளதால், இளவரது இயற்கை பாதுகாவலரை நீக்கம் செய்வதும், வழக்கமான

சட்ட நடைமுறை என்பதாலும், அவ்வாறு உத்தரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்தது என்பதாலும், இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2024.08.23 16:33:54 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2024.08.23 16:34:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.